திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். பேரவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் இந்த பிரச்சனையை எழுப்பினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றம் என்றால் இங்கு எல்லோரும் தான் இருப்பார்கள்.

2. இரங்கற் குறிப்புகள்.

(அ) முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் வி. கே. கண்ணன், ஏ. வேலு, கே. கஜபதி ரெட்டியார், ஆச்சார்யா வினோபாபாவே ஆகியோர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. வி. கே. கண்ணன் அவர்கள் 30-8-1982 அன்றும், திரு. ஏ. வேலு அவர்கள் 24-11-1982 அன்றும், திரு. கே. கஜபதி ரெட்டியார் அவர்கள் 15-12-1982 அன்றும், மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கண்ணன் அவர்கள் 1952 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் ஆரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1957 ஆம் ஆண்டு வரை பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ. வேலு அவர்கள் 1952 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை ரிசர்வ் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1957 ஆம் ஆண்டு வரை பேரவையில் நல்ல முறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. கே. கஜபதி ரெட்டியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1957 ஆம் ஆண்டு வரை பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வோதய இயக்கம், மற்றும் பூதான இயக்கம் ஆகியவற்றைத் தோற்றுவித்தவரும், மகாத்மா காந்தியடிகளின் ஆன்மீக வாரிசாக விளங்கியவருமான ஆசார்ய வினோபா பாவே அவர்கள் 15-11-1982 அன்று மறைந்ததை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1983 ஜனவரி 25]

திரு. வினோபா பாவே அவர்கள் 1895 ஆம் ஆண்டு மராட்டிய மாநிலத்தில், கொலாபா மாவட்டத்திலுள்ள ககோடாவில் பிறந்தார். வசதியான குடும்பத்தில் பிறந்திருந்தாலும், அவர் பள்ளிப் படிப்புடன் தம் கல்வியை நிறுத்திக் கொண்டதோடு, வெறும் சான்றிதழ்களில் நம்பிக்கையின்மை காரணமாகத் தாம் பெற்ற பள்ளிச் சான்றிதழ்களையெல்லாம் தீயிலிட்டுக் கொளுத்தி விட்டார். அவரது உள்ளத்தில் எழுந்த பல சிந்தனைகளுக்கு விடை காண, அச்சமயம் இந்திய விடுதலைப் போரில் பிரபலமாகிக் கொண்டிருந்த மகாத்மா காந்தியடிகளுக்குப் பல கடிதங்கள் எழுதி, பிறகு 1916 ஆம் ஆண்டு அவரை நேரில் சந்தித்து, அது முதல் அவரது சீடராக விளங்கினார். வினாயக் நரஹரி பாவே என்று அழைக்கப்பட்டு வந்த அவரை மகாத்மா காந்தியடிகள் அன்பாக வினோபா பாவே என்று அழைக்க அதுவே அவரது பெயராக ஆகியது.

காந்தியடிகளைச் சந்தித்தபின் இந்திய விடுதலைப் போரில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் திரு. வினோபா அவர்கள். 1940 ஆம் ஆண்டு கேரள மாநிலம் வைக்கத்தில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டதற்காகக் கைது செய்யப்பட்டு அவர் 6 மாதம் சிறைத் தண்டனை பெற்றார். பிறகு 1942 ஆம் ஆண்டு ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தில் கலந்து கொண்டு அதற்காக மூன்று ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆயினும், மகாத்மா காந்தியடிகள் முழு மூச்சுடன் விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்ததால், நிர்மாணப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு அவரால் ஏற்படுத்தப்பட்ட பல ஆசிரமங்களின் பொறுப்புகளை திரு. வினோபா அவர்களிடம் ஒப்படைத்தார். இதன் காரணமாக நிலமற்ற ஏழை விவசாயிகளின் துயர் துடைக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள திரு. வினோபா அவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

1951 ஆம் ஆண்டு பூதான இயக்கத்தைத் துவக்கி, 13 ஆண்டுகள் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் 40 ஆயிரம் மைல்கள் கால்நடையாகவே சென்று, மொத்தம் 45 லட்சம் ஏக்கர் நிலம் தானமாகப் பெற்று நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அவற்றை அளித்தார். 1951 ஆம் ஆண்டு தீவிரவாதிகளின் இயக்கத்தினால் கலவரப் பகுதியாக விளங்கிய தெலுங்கானாவில் காவலர் துணையின்றிச் சுற்றுப்பயணம் செய்து, பூதான இயக்கம் பிறந்த இடமான பொச்சம்பள்ளியில் 40 ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்களுக்கு 80 ஏக்கர் நிலம் அளிக்கப்பட ஏற்பாடு செய்தார். இந்தப் பிரசித்தி பெற்ற தெலுங்கானா பயணம் 51 நாட்கள் நடந்தது. மொத்தம் 200 கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்து நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அளிப்பதற்கென 12,200 ஏக்கர் நிலம் தானமாகப் பெற்றார்.

1973 ஆம் ஆண்டில் பூதான இயக்கத்தை முடித்துக் கொண்டு அவர் பூனா அருகில் பவுனார் என்னும் இடத்தில் ஆரடு அமைத்துக் கொண்டு அங்கு தங்கி இருக்கலானார்.

அவர் ஒரு மேதையாக, பன்மொழிப் புலவராக, எழுத்தாளராக, இலட்சியவாதியாக, இந்திய மக்களின் நன்மதிப்பையும், மரியாதையையும் பெற்ற ஒரு தூய துறவியாக வாழ்ந்து வந்தார். அவர் எழுதிய நூல்கள் 34. மராத்தியில் அவர் எழுதிய கீதை என்ற நூல் 46 முறை வெளியிடப்பெற்று, 6.75 இலட்சம் பிரதிகள் விற்கப்பட்டன. அவர் இஸ்லாம், கிறிஸ்துவம், சீக்கியம் மற்றும் பௌத்தம் ஆகிய சமயங்கள் குறித்தும் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

பிலிப்பைன்ஸ் நாட்டு மகசேசே விருது 1968 ஆம் ஆண்டு அவரது சமூகப் பணிகளுக்காக அவருக்கு வழங்கப்பட அறிவிக்கப் பட்டது. ஆனால், அவர் அப்போது பூதான இயக்கத்திற்காகப் பாத யாத்திரையில் ஈடுபட்டிருந்ததால் அந்த விருதைப் பெற்றுக்கொள்ள அந்நாட்டிற்குச் செல்ல மறுத்து விட்டார். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு ஏழு நாட்கள் வரை உணவோ, மருந்தோ, தண்ணீரோ கூட உட்கொள்ளாமலிருந்து 15–11–1982 அன்று இயற்கை எய்தினார்.

ஆச்சார்ய வினோபா பாவே அவர்களின் மறைவு குறித்து நமது ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

(ஆ) உறுப்பினர் திரு.சி. கேசவ ஆதித்தன் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருச்செந்தூர் தொகுதியிலிருந்து இப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பணியாற்றிய திரு. சி. கேசவ ஆதித்தன் அவர்கள் 26–11–1982 அன்று மறைந்தது குறித்துப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"திருச்செந்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று இப்பேரவையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தவரும், இனிய பண்பும், உள்ளமும், செயல்திறனும் கொண்டவரான திரு. சி. கேசவ ஆதித்தன் அவர்கள் 26–11–1982 ஆம் தேதியன்று மறைந்தமை குறித்து